RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 285 | அக்டோபர்.16 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆம்புலன்ஸ் சேவை சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை



சென்னை, அக்.16-

தமிழ்நாடு அரசு சுகாதார திட்டத்தின்கீழ் செயல்படும் '108' அவசர ஆம்புலன்ஸ் சேவைகள் சார்பில் தீபாவளியை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக ஆம்புலன்ஸ் சேவை மாநிலத் தலைவர் எம்.செல்வகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தீபாவளி பண்டிகையின் போது தீயணைப்பு, பேரிடர் மீட்பு உள்ளிட்ட அனைத்து அவசர சேவைகளுக்கும், மருத்துவ உதவிகளுக்கும் '108' எண்ணை அழைக்கலாம். குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் முன்னெச்சரிக்கை அடிப்படையில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அனைத்து ஆம்புலன்ஸ் வாகனங்களிலும் தீயணைப்பு சாதனங்கள், மீட்பு உபகரணங்கள், ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் அவசர மருந்துப் பொருள்கள் போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் தீயணைப்பு அல்லது பிற அவசர உதவிகள் தேவைப்பட்டால், '108' என்ற ஒரே எண்ணை தொடர்பு கொண்டால், உடனடியாக அருகிலுள்ள சேவை மையத்துக்கு உரிய தகவல் அனுப்பப்படும். அனைத்து ஆம்புலன்ஸ்களிலும் தீக்காயங்களை கையாளும் வசதி செய்யப்பட்டுள்ளது. நெருக்கடியான குடியிருப்பு பகுதிகள் மற்றும் குறுகிய பாதைகளில் துரிதமாகச் செயல்பட, அவசரகால '108' பைக் ஆம்புலன்ஸ்கள் நிறுத்தப்படும்.

ஒருங்கிணைந்த சேவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், தீயணைப்புத்துறை, மருத்துவ கல்லூரிகள் மற்றும் அனைத்து அரசு பொது மருத்துவமனைகள், மருத்துவ சேவைகள் இணை இயக்குநர், மாவட்ட சுகாதார அதிகாரி, பேரிடர் மேலாண்மை துறைகளுடன் ஒருங்கிணைந்து இந்த சேவையில் ஈடுபடுவார்கள்.

தமிழகத்தில் எந்தப் பகுதியில் இருந்து அழைத்தாலும் சராசரியாக 10 நிமிடம் 14 நொடிகளில் சம்பந்தப்பட்ட இடத்துக்கு ஆம்புலன்ஸ் செல்லும். '108' அவசர சேவை எப்போதும் உங்களுடன் இருக்கும் நண்பனாக, உங்கள் அவசர தேவைக்கு தயாராக இருக்கும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# முல்லை பெரியாறில் புதிய அணையைக் கட்ட முயற்சிப்பதா? வைகோ கண்டனம்



சென்னை, அக்.16-

முல்லை பெரியாறில் புதிய அணையைக் கட்டும் முயற்சிக்கு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: முல்லை பெரியாறு அணை தொடர்பாக கேரள பாதுகாப்புபிரிகேட் என்ற தன்னார்வ நிறுவனம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், முல்லை பெரியாறு நீர்த்தேக்க மட்டத்தை உடனடியாகக் குறைக்க வேண்டும். தேவைப்பட்டால், அணையைச் செயலிழக்கச் செய்வதற்கோ அல்லது அணை புனரமைப்பு திட்டத்தைத் தயாரிப்பதற்கோ வழிமுறைகள் உருவாக்க உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்த மனு மீது தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதி கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு அக்.13ம் தேதி விசாரணை மேற்கொண்டது. அப்போது அணையை வலுப்படுத்த சில உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாம் அல்லது அதை மதிப்பிடுவதற்கு ஒரு நிபுணர் குழுவை நியமிக்கலாம் அல்லது புதிய அணை கட்டுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயலாம். எனவே, இந்த வழக்கில் மத்திய அரசு மற்றும் தமிழக, கேரள அரசுகள் பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர். உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு தமிழகத்துக்கு பாதகத்தை ஏற்படுத்தும்.

அணையின் உறுதித் தன்மை குறித்து ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றம், முன்னாள் நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் அமைத்த குழு, கடந்த 2012ம் ஆண்டு சமர்பித்த அறிக்கையில் முல்லை பெரியாறு அணை உறுதியாக இருப்பதால், வேறு புதிய அணை கட்டத் தேவை இல்லை, நிலநடுக்கம் ஏற்பட்டாலும், அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தினாலும் பாதிப்பு இல்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் முல்லை பெரியாறு அணையை இடித்துவிட்டு, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக புதிய அணை கட்ட முயற்சிக்கும் கேரள மாநில அரசு, கேரள பாதுகாப்பு பிரிகேட் போன்ற அமைப்புகள் மூலமாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது. கேரள அரசின் இந்த சதித்திட்டத்தை தமிழக அரசு முறியடிக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கோவை ஜி.டி.நாயுடு மேம்பாலத்தில் 30 கி.மீ வேகத்துக்கு அதிகமாக சென்றால் வழக்கு: காவல் ஆணையர்

கோவை, அக்.16-

கோவை மாநகர காவல் ஆணையர் ஆ.சரவண சுந்தர் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: கோவை அவிநாசி சாலையில், புதிதாக திறக்கப்பட்டு உள்ள ஜி.டி.நாயுடு மேம்பாலம் தொடங்கும் இடமான உப்பிலிபாளையம் ரவுண்டானாவில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. மேம்பாலத்தை விட்டு கீழே இறங்கும் வாகன ஓட்டிகளுக்கு எப்படி செல்வது என்ற வழி தெரியவில்லை.

அத்துடன் மேம்பாலத்தில் செல்ல பல்வேறு பகுதிகளில் இருந்து வருகிறார்கள். இதுதான் போக்குவரத்து நெரிசலுக்கு காரணம் ஆகும். உப்பிலிபாளையம் ரவுண்டானாவில் சிக்னல் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

பழைய அண்ணா மேம்பாலத்தில் இருந்து வரும் வாகனங்கள் ரவுண்டானாவில் நேராக எல்ஐசி சந்திப்பு சென்று யுடேர்ன் செய்து வர அனுமதிக்கப்பட்டு உள்ளது. சிக்னல் நடைமுறைக்கு வந்ததும், முன்பு உள்ளதுபோன்று அனுமதிக்கப்படும். போக்குவரத்து நெரிசலை தடுக்க சில மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடனும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

அவர்கள் சர்வீஸ் சாலையை அகலப்படுத்தி தருவதாக கூறி உள்ளனர். அதன் பின்னர் கண்டிப்பாக போக்குவரத்து நெரிசல் குறைந்துவிடும். அவிநாசி சாலை மேம்பாலத்தில் செல்லும் வாகனங்கள் 30 கி.மீ. வேகத்துக்கும் அதிகமாக செல்லக்கூடாது.

அதை கண்காணிக்க மேம்பாலத்தின் மீது குறிப்பிட்ட பகுதிகளில் ஏ.ஐ. தொழில்நுட்பத்துடன் கூடிய கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. மேம்பாலத்தின் மீது அதிவேகமாக சென்றால் கேமராக்கள் மூலம் அபராதம் விதிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# கரூர் சம்பவம்: சட்டப்பேரவையில் அதிமுகவை பாராட்டிய முதல்வர் ஸ்டாலின்



சென்னை: அக்.16-

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் நடந்த அதே இடத்தில் அதற்கு இரு தினங்களுக்கு முன்பு நடைபெற்ற அதிமுக பிரச்சார கூட்டம், முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு கட்டுப்பாட்டோடு நடைபெற்றதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்தார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக சார்பில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிலையில், அந்த சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் விளக்கம் அளித்தார்.

அப்போது, தவெக நடத்திய பிரச்சார கூட்டத்தையும் அதற்கு இரு தினங்களுக்கு முன்பு அதிமுக நடத்திய பிரச்சார கூட்டத்தையும் ஒப்பிட்டுப் பேசினார். அவர் தனது உரையில், "கரூர் வேலுசாமிபுரத்தில் கூட்டம் நடத்த அனுமதி கோரிய கடிதத்தில் கூட்டம் நடத்த மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை என தவெக நிர்வாகிகள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், செய்தியாளர் சந்திப்பு மற்றும் சமூக ஊடகங்களில் மதியம் 12 மணிக்கு கட்சியின் தலைவர் கரூர் வருவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்திருந்தார். இதனால், கரூரில் காலை முதலே மக்கள் வரத் தொடங்கினார்.

செப். 27ம் தேதி அக்கட்சியின் தலைவர் சென்னையில் இருந்து காலை 8.40 மணிக்குப் புறப்பட்டு 9.25 மணிக்கு திருச்சி வந்தடைந்தார். அதன் பின்னர் நாமக்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு கரூருக்கு இரவு 7 மணிக்கு வந்துள்ளார். அதாவது அறிவிக்கப்பட்ட 12 மணிக்குப் பதிலாக 7 மணி நேரம் கடந்துதான் வந்தார். இந்த காலதாமதம் கூட்ட நெரிசலுக்கு முக்கிய காரணமாக இருந்தது.

இங்கே, அனைத்து கட்சிகளைச் சார்ந்தவர்களும் இருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான். கூட்ட ஏற்பாட்டாளர்கள் சில முக்கிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அவை அன்றைய தினம் கரூரில் செய்யப்படவில்லை. காலை முதல் காத்திருந்த மக்களுக்கு போதிய குடிநீர் இல்லை, உணவு ஏற்பாடும் ஏற்பாட்டாளர்களால் செய்யப்படவில்லை. இயற்கை உபாதைகளைக் கழிக்க பெண்களால் வெளியே செல்ல முடியவில்லை.

சம்பவம் நடந்த அதே வேலுசாமிபுரத்தில் அதற்கு இரு தினங்களுக்கு முன்பாக அதாவது செப்.25ம் தேதி எதிர்க்கட்சித் தலைவரின் பரப்புரை நடந்தது. அந்த கூட்டத்தில் பங்கேற்றவர்கள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டனர். எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் நடந்து முடிந்தது. அதில் சுமார் 12,000 முதல் 15,000 வரை பங்கேற்றிருக்கிறார்கள். அந்த பரப்புரைக்கூட்டத்திற்கு சுமார் 137 காவலர்கள், 30 ஊர்க்காவல்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். ஆனால், அதற்கு நேர் மாறாக இந்த கட்சியினுடைய நிகழ்ச்சி நடந்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

# கரூர் விவகாரத்தில் ஆளுங்கட்சிக்கு ஏன் இவ்வளவு பதற்றம்? வெளிநடப்புக்குப் பின் இபிஎஸ் கேள்வி



சென்னை, அக்.16-

"கரூர் விவகாரம் பற்றி பேசினால், ஆளுங்கட்சிக்கு ஏன் இவ்வளவு பதற்றம். இந்த விவகாரத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது. கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புக்கு பாதுகாப்புக் குறைபாடே காரணம்." என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் இரண்டாம் நாளான இன்று, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விவாதம் நடந்தது. கரூர் கூட்டநெரிசல் குறித்த சட்டப்பேரவையில் நடந்துகொண்டிருந்த விவாதத்தின் போது, தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை குறிப்பிட்டு இபிஎஸ் மீது அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் குற்றச்சாட்டு வைத்தார். இதைத் தொடர்ந்து அதிமுக உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். சபாநாயகர் இருக்கையின் முன் அமர்ந்து எடப்பாடி பழனிசாமி தர்ணாவில் ஈடுபட்டார்.

தொடர்ந்து அமளியில் ஈடுபட்ட அதிமுக உறுப்பினர்கள், அரசுக்கு எதிராக முழுக்கமிட்டபடி பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். செங்கோட்டையன் இபிஎஸ் பேசுவதற்கு முன்பே சென்றுவிட்டார். இருப்பினும், ஓபிஎஸ் ஆதரவாளர்கள் வெளிநடப்பு செய்யவில்லை.

பின்னர், சட்டப்பேரவையில் இருந்து அதிமுக, பாஜக வெளிநடப்பு செய்தது. பின்னர் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசும்போது, "முதல்வர் பேசியதை நாங்கள் அமைதியாக கேட்டோம். ஆனால் சாபாநாயகர் நாங்கள் பேச உரிய அனுமதி கொடுக்கவில்லை. எதிர்க்கட்சியினர் பேசிய பிறகு, முதல்வர் பதில் அளிப்பது தான் மரபு.

தவெக தலைவர் மக்கள் சந்திப்புக் கூட்டத்தில் பத்து நிமிடம் தான் பேசியிருப்பார், அப்போது ஒரு செருப்பு வந்து அங்கு விழுகிறது. இது குறித்து அரசு ஒரு விளக்கமும் அளிக்கவில்லை. கரூரில் 500 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதாக ஏடிஜிபி கூறினார். 660 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதாக முதல்வர் கூறுகிறார். இதிலேயே முரண்பாடு; இதனால்தான் கரூர் சம்பவத்தில் அரசின்மீது சந்தேகம் எழுகிறது. கரூர் சம்பவத்துக்கு அரசின் அலட்சியமே காரணம். எவ்வளவு பேர் கூடுவார்கள் என உளவுத்துறைக்கு தெரிந்திருக்கும். ஆனாலும் போதிய பாதுகாப்பு வழங்கவில்லை.

சட்டப்பேரவையில், பேச முடியாததை இப்போது செய்தியாளர்களிடம் பேசுகிறேன். ஜனவரியில் அதிமுக கூட்டம் நடத்த கரூர் வேலுச்சாமிபுரத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு சென்ற பிறகே எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எங்களுக்கு நிராகரித்த இடத்தை தவெகவுக்கு எதற்காக அரசு கொடுத்தது?; கரூர் சம்பவத்தில் அசம்பாவிதம் நடக்க வேண்டும் என திட்டமிட்டு அவ்விடத்தை கொடுத்ததாக மக்களும் சந்தேகிக்கின்றனர். ஏதோ உள்நோக்கத்தோடு தான் இந்த இடம் கொடுக்கப்பட்டது. போலீஸாரின் கவனக் குறைவே கூட்ட நெரிசலுக்கு காரணம். எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்திருந்தால், இப்படி நடந்திருக்காது.

கரூர் சம்பவத்தில் வேகம் காட்டும் முதல்வர், கிட்னி திருட்டு விவகாரத்தில் ஏன் வேகம் காட்டவில்லை. கரூர் விவகாரத்தில் நாங்கள் அரசியல் செய்யவில்லை. மக்களுக்காகவே பேசுகிறோம். கரூர் விவகாரம் பற்றி பேசினால், ஆளுங்கட்சிக்கு ஏன் இவ்வளவு பதற்றம்?. இந்த விவகாரத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதனால் தான் நான் பேசும்போது, ஒவ்வொரு அமைச்சரும் எழுந்து பதில் சொல்கிறார்கள். கரூர் சம்பவத்தில் சிபிஐ விசாரணையை நினைத்து ஆளும்கட்சி பயப்படுகிறது. எல்லா விஷயத்திலும் அரசியல் செய்யும் கட்சி திமுகதான்.

ஒரு அரசியல் கூட்டத்தில் 41 பேர் இறந்தது இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை. அவசர அவசரமாக ஒரு நபர் ஆணையத்தை எப்படி அமைக்க முடியும். உடற்கூராய்வு செய்தது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. உண்மை சம்பவத்தை மறைக்க அரசு நினைக்கிறது. ஒரு நபர் ஆணையம் என்பது உண்மையை மறைக்கும் முயற்சி" இவ்வாறு பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசினார்.

# பி.எப். பணத்தை 100 சதவீதம் எடுக்கலாம்: விதிகளை எளிதாக்கியது மத்திய அரசு



புதுடெல்லி, அக்.16-

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் உள்ள பணத்தை, அத்தியாவசிய தேவைகளுக்கு 100 சதவீதம் எடுக்கும் வகையில் விதிமுறைகளை எளிதாக்கி உள்ளது மத்திய அரசு. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (இபிஎப்ஓ) அமைப்பின் 238வது மத்திய அறங்காவலர்கள் குழு கூட்டம் மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பிஎப் பணத்தை திரும்பப் பெறுவதற்கான விதிமுறைகளை எளிதாக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி, மருத்துவம், கல்வி, திருமணம், வீடு மற்றும் சிறப்பு சூழ்நிலைகள் என அத்தியாவசிய தேவைகளுக்கு இனிமேல் தொழிலாளர்கள் தங்கள் பிஎப் பணத்தில் 100 சதவீதத்தையும் திரும்ப பெறலாம். இது 7 கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கள் ஓய்வூதியத்தைப் பாதுகாப்பதோடு, தங்கள் சேமிப்பை எளிதாக அணுகவும் முடியும்.

முன்னதாக பிஎப் பணத்தை திரும்பப் பெறுவதற்கு 13 வகையான விதிமுறைகளை வைத்திருந்தது. தற்போது அவை எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே ஒரு பிரிவின் கீழ் பணத்தை திரும்பப் பெறுவதற்கான விதிமுறையை அறிவித்துள்ளது. இது தொழிலாளர்கள் எளிதாக புரிந்து கொள்ளவும், பணத்தை எளிதாக திரும்பப் பெறவும் வழிவகுக்கும். திருமணம், கல்வி செலவுக்கு 3 முறை மட்டுமே பிஎப் சேமிப்பில் இருந்து பணத்தைப் பெற முடியும். தற்போது, கல்விக்கு 10 முறை வரையிலும், திருமணத்துக்கு 5 முறை வரையிலும் பணம் எடுக்க முடியும்.

இனிமேல் தொழிலாளர்கள் தங்களுடைய சேமிப்பு மற்றும் நிறுவனத்தின் பங்களிப்பு தொகையையும் சேர்த்து தகுதிக்கேற்ப 100 சதவீத பணத்தை திரும்பப் பெற முடியும். மேலும், பிஎப் சேமிப்பில் இருந்து சிறிதளவு பணம் எடுப்பதற்கான குறைந்தபட்ச பணிக் காலம் 12 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், சிறப்பு சூழ்நிலைகளின் கீழ் பணத்தை திரும்பப் பெற, காரணங்களை தெரிவிக்க வேண்டியதில்லை.



# சிவகங்கையில் திருமாவளவனுக்கு Z+ பாதுகாப்பு வழங்க கோரி வி.சி.க வினர் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, அக்.16-

சிவகங்கை அரண்மனைவாசல் முன்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய்யை அவமதித்த ராகேஸ் கிஷோர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும்.எம்.பியுமான திருமாவளவன் வாகனத்தை மறித்து வம்பிழுத்த ராஜீவ்காந்தி மீது வழக்கு பதிவு செய்து முறையான விசாரணை நடத்த வலியுறுத்தியும் கோஷமிட்டனர் . மேலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவனவனுக்கு ஞீ+ பாதுகாப்பு வழங்க கோரியும் முழக்கமிட்டனர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலையா தலைமை வகித்தார்.சிவகங்கை வடக்கு மாவட்ட செயலாளர் இளையகௌதமன் முன்னிலை வகித்தார். மாவட்ட பொருளாளர் பாஸ்கரன்.மாவட்ட செய்தி தொடர்பாளர் ஆதிவளவன். அரசு ஊழியர் ஐக்கிய பேரவையின் மாவட்ட செயலாளர் டாமின் குமார். சிறப்பு அழைப்பாளர்: மாநில கருத்தியல் பரப்பு துணைச்செயலாளர் செல்லப்பாண்டியன் கண்டன உரையாற்றினார். இந்நிழ்வில். மாநில துணைச்செயலாளர் அய்யனார்.பெரியசாமி. பாலமுருகன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் சேட்முகமது.ராமதாஸ். கார்த்திக்.கண்ணன். வெற்றிவிஜயன். கிருஷ்ணமூர்த்தி.ஜேம்ஸ் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்..





# காளையார் கோவில் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உலக மாணவர் தின கொண்டாட்டம்

காளையார் கோவில், அக்.16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் பிறந்தநாளை 'உலக மாணவர்கள் தினம்' ஆக கொண்டாடப்பட்டது.. இந்தியாவின் புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவரும், முன்னாள் குடியரசுத் தலைவருமான டாக்டர் அவுல் பகீர் ஜைனுலாப்தீன் அப்துல் கலாமின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15ஆம் தேதி 'உலக மாணவர் தினம்' கொண்டாடப்படுகிறது. இந்த நாள் டாக்டர் கலாமின் பாரம்பரியத்தை கௌரவிப்பதோடு மட்டுமல்லாமல், குறிப்பாக உலக இளைஞர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது, விழாவிற்கு பொறுப்பு தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமையில் நடை பெற்றது. தலைமையாசிரியர் சுரேஷ் உலக மாணவர் தினத்தின் நோக்கங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

கலாமின் வாழ்க்கைப் பயணம், ஒரு சிறிய நகரத்திலிருந்து தொடங்கி குடியரசுத் தலைவர் அலுவலகம் வரை நீண்டு நெடிந்தது. அவரது இந்தப் பயணம் உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மாணவர்களை பெரிய கனவு காணவும், தங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்கவும் தூண்டுகிறது. அவருடைய வாழ்க்கைக் கதை கல்வியும் மன உறுதியும் திறக்கக்கூடிய சாத்தியக்கூறுகளுக்கு ஒரு சான்றாகும் உலக மாணவர்கள் தினத்தை கொண்டாடுவது டாக்டர் கலாமின் தொலைநோக்கை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவுகிறது. அவரது பங்களிப்புகளை அங்கீகரிப்பதன் மூலம், அவரது இலட்சியங்களும் கொள்கைகளும் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு தொடர்ந்து ஊக்கமளிப்பதை உறுதி செய்கிறது.

இந்தக் கொண்டாட்டத்தின் தாக்கம் இந்த மாணவர் தினத்தை மட்டுமே கொண்டாடும் நாளுக்கானது மட்டுமல்ல, அதற்கும் அப்பாற்பட்டது. ஏனெனில், இது கல்வி மற்றும் மாணவர்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கான நீண்டகால அர்ப்பணிப்பை ஊக்குவிக்கும் நாள் என்று கூறினார். இந்நிகழ்வில் இந்நிகழ்வில் அப்துல் கலாம் பற்றி பேசினார். ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் சத்துணவு பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அப்துல் கலாம் புகைப்படத்திற்கு மரியாதை செய்தனர்.

# பாஜக சார்பில் தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்' யாத்திரை நிகழ்வில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மக்களிடையே பரப்புரை





தாம்பரம், அக்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சண்முகம் சாலையில் பாஜக சார்பில் தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்' யாத்திரை நிகழ்வில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மக்களிடையே பரப்புரை மேற்கொண்டார், உடன் செங்கல்பட்டு மாவட்டச் தலைவர் ரகுராமன், முன்னாள் மாவட்ட தலைவர் வேதார சுப்பிரமணியம், அதிமுக மாவட்ட கழக செயலாளருமான சிட்லபாக்கம் ராஜேந்திரன், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் பா.தன்சிங், கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நயினார் நாகேந்திரனுக்கு மாவட்டத் துணைத் தலைவர் டாக்டர் விஜயலட்சுமி சிலை பரிசாக அளித்தனர்.

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மக்களிடையே பேசுகையில்:

தேர்தலுக்கான அச்சாரமாக இந்த கூட்டம் கூடியிருக்கிறது, திராவிட மாடல் அரசை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கத்திற்காக கூடியிருக்கும் கூட்டம் தான் பல்லாயிரக்கணக்கானோர் இந்த கூட்டத்தில் கூடியிருக்கிறார்கள்.

இந்த கூட்டணி ஆட்சி மாற்றத்திற்கு அச்சாரமாக விளங்கும் கூட்டணி செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்வேறு பிரச்சனைகள் இருக்கிறது பாதாள சாக்கடை பணிகளை ஒழுங்காக செய்யாததால் கழிவுநீர் தெருக்களில் தேங்கி நிற்கும் பிரச்சனை இருக்கிறது.

திமுக ஆட்சிக்கு முடிவு கட்ட அனைவரும் ஒன்றுபட்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி அங்கம் வகிக்கும் ஆட்சியாக தமிழகத்தில் ஆட்சி வரவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் பாஜக பட்டியல் அணி மாநில தலைவர் நெடுங்குன்றம் சூர்யா தலைமையில் சுமார் 700 க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கொண்டனர்





# தாம்பரத்தில் ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது

தாம்பரம், அக்.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாடு மோட்டார் வாகனம் ஓட்டுநர் முன்னேற்ற சங்கம் டாக்டர் கலைஞர் ஷேர் ஆட்டோ ஆட்டோ ஓட்டுநர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் ஆயுத பூஜை விழா நடைபெற்றது தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மாவட்டச் செயலாளர் சசிகுமார் தலைமையில் பகுதி துணைச் செயலாளர் மற்றும் சங்கத் செயலாளர் தனஞ்செழியன், பொருளாளர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சாமிக்கு படையல் போட்டு ஆட்டோக்களுக்கு வாழைக்கன்று கட்டி வர்ண பேப்பரில் அலகரித்து சந்தனமும் பூசி குங்குமம் வைத்து அலங்கரித்து ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது இதில் சிறப்பு அழைப்பாளராக மண்டல குழு தலைவர் பகுதி கழகச் செயலாளர் டி.காமராஜ் கலந்துகொண்டு சாமி படத்திற்கு தீபாரத்தனை செய்து பூஜை துவங்கி வைத்தார் பின்னர் அதனைத் தொடர்ந்து ஒரு கிராம் தங்க நாணயம் மற்றும் பரிசு பொருட்கள் இனிப்புகள் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு வழங்கினார் நிகழ்ச்சியில் ஆர்.செல்வகுமார், எஸ்.கார்த்திக், எம்.ரமேஷ், லஷ்மி, வாட்டர் மேகன், மற்றும் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# சிவகங்கையில் வானவில் மன்ற மீளாய்வுக் கூட்டம்








சிவகங்கை, அக்.16-

சிவகங்கை மருது பாண்டியர் நகர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறையின் கூட்டரங்கில் செப்டம்பர் 2025 வேலை அறிக்கை சமர்ப்பிக்கும் மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது. வானவில் மன்ற கருத்தாளர் புவியரசி வரவேற்றார். சிவகங்கை மாவட்டக் கல்வி அலுவலர் வடிவேல் தலைமை வகித்தார். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயு முன்னிலை வகித்தார். பள்ளிக் கல்வித்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ நோக்கவுரையாற்றினார். அமைப்புசார் வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர் மாலா பயிற்சியை ஒருங்கிணைப்பு செய்து முக்கிய தகவல்களைக் கூறினார். முதன்மை கருத்தாளர் இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வானவில் மன்ற கருத்தாளர்களின் கடமைகள் குறித்தும் துளிர் திறனறிதல் தேர்வு குறித்தும் குழந்தை விஞ்ஞானிகள் ஆய்வுக்கட்டுரைகள் சமர்பிப்பது குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். நவம்பர் 15 ஆம் தேதி நடைபெறக்கூடிய துளிர் திறனறிதல் தேர்வுக்கான பிரசுரங்கள் பதாகைகள் வழங்கப்பட்டன. வேலை அறிக்கை முன் பயண அட்டவணை மற்றும் வேலை அறிக்கை தொகுப்பு போன்ற படிவங்கள் ஒப்படைக்கப்பட்டது. வெப்ப உமிழ் வினை வெப்ப கொள்வினை

பெர்னூலியின் தத்துவம் நீரின் விசை முழுக்கள் இயல் எண்கள் தாவர உலகம் குறித்த அறிவியல் மற்றும் கணித செய்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க பொறுப்பாளர் தமிழ்செல்வம் வாழ்த்துரை வழங்கினார். வானவில் கருத்தாளர் ஜெயபிரியா நன்றி கூறினார்.



# மானாமதுரை வடக்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம்

## ஒசெ.முத்துச்சாமி, சோனைமுத்து, சமயமுத்து, ஆ.மு.சண்முகநாதன், கி.ரவீந்திரன் பங்கேற்பு

சிவகங்கை, அக்.16-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வடக்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டமானது ஒன்றிய அவைத்தலைவர் வேலூர் சோனைமுத்து தலைமையிலும் , மாவட்ட பிரதிநிதி, ஊராட்சி முன்னாள் தலைவர் வி.எம். சமயமுத்து, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர், ஊராட்சி முன்னாள் தலைவர் ஆ. மு. சண்முகநாதன், வரத்தக அணி ரவீந்திரன் , ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது...

அன்மையில் கரூர் வேலுச்சாமிபுரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி இறந்த 41 பேருக்கு ஆழ்ந்த இரங்கல் உள்ளிட்ட கழக வளர்ச்சிப் பணிகள் மற்றும் குருபூஜைக்கு வருகைதரும் கழகத்தலைவர் , மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களை வரவேற்க அதிகளவில் கழக நிர்வாகிகள் ஒன்றுசேர்வது உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துச்சாமி பேசினார்...

இந்த கூட்டத்தில் தொமுச எல். மாரிமுத்து, கிளாதரி கருப்புச்சாமி, ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் வேங்கை பாண்டி , அறங்காவலர் பச்சேரி அ. கனேசன், கிளைக்கழக செயலாளர், வேம்பத்தூர் முருகன் , விவசாய அணி பச்சேரி மீனாட்சி புரம் தர்மராஜ், உள்ளிட்ட வடக்கு ஒன்றிய , மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் சமத்துவபுரம் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர் வீடு கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்



கடலூர், அக்.16-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூவாணிக்குப்பம் பகுதியில் சமத்துவபுரம் மற்றும் ரெங்கநாதபுரம் ஊராட்சியில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர் வீடு கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அனைத்து தரப்பட்ட பொதுமக்களும் சமத்துவத்துடன் தங்களுக்கான நிலையான குடியிருப்புடன் வசிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சமத்துவபுரம் குடியிருப்புகளை தொடங்கி வைத்தார்.

அவர்களை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமத்துவபுரத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். குடியிருப்புகளுக்கு மின்சார வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை அம்சங்களுடன் கூடுதலான இடவசதிகளுடன் போதிய காற்றோட்ட வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளை ஏற்படுத்தி வருகிறார். அந்த வகையில் பூவாணிக்குப்பம் பகுதியில் சமத்துவபுரம் ரூ.6.73 கோடி மதிப்பீட்டில் 100 வீடுகள், நுழைவு வாயில் மற்றும் பெரியார் சிலை போன்ற சிறப்பம்சங்களுடன் மொத்தம் ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்பிருந்த முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கான 10ஜ்10 அளவில் இருந்த ஒரு வீட்டின் பரப்பளவை 20ஜ்20 என்ற அளவில் போதிய இடவசதிகளுடன் அதிகரித்தது இலங்கை தமிழர்களும் தங்கள் குடும்பங்களுடன் நல்ல முறையில் வாழ வழிவகை செய்துவருகிறார்கள் அந்தவகையில் ரெங்கநாதபுரம் ஊராட்சியில் மேட்டுவெளி பகுதியில் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு ரூ.8.3 கோடி மதிப்பீட்டில் 300 சதுரஅடி அளவில் ஓடு பதித்த தரை தளத்துடன் கூடிய 4 வீடுகள் கொண்ட 41 தொகுப்புகள் மற்றும் 2 தனிவீடுகள் என மொத்தம் 166 வீடுகளுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வூராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் அனைத்து திட்டப்பணி களையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது, செயற்பொறியாளர் வரதராஜபெருமாள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேசன், ராமச்சந்திரன், உதவி பொறியாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# காளையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் உலக கை கழுவும் தினம்





காளையார் கோவில் அக்16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் உலக கை கழுவும் தினம் கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியை ஜோஸ்பின் லதா தலைமை வகித்தார். காளையார்கோவில் வட்டாரக் கல்வி அலுவலர் லதாதேவி பெரியகண்ணனூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை பத்மினி முன்னிலை வகித்தனர். சாரண ஆசிரியர் நாகராஜ் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் அறிவியல் ஆசிரியர் ஆரோக்கியசாமி 2025 அக்டோபர் 15 ஆம் தேதியின் மையக்கருப்பொருளாக உயிர்களை காப்பாற்றுங்கள். உங்கள் கைகளைக் கழுவுங்கள் என்பதன் முக்கியத்துவம் குறித்தும் கை கழுவுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் மாணவர்களிடம் கலந்துரையாடினார். சாரண இயக்க மாணவர்கள் கை கழுவுதல் படிநிலைகள் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர். கை கழுவுவதன் அவசியம் குறித்து பிறரிடம் எடுத்துக் கூறும் தூதுவர்களாக செயல்படுவோம் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அழகப்பா கல்வியியல் கல்லூரி மாணவி தேவிகா தர்ஷினி நன்றி கூறினார். ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தமிழ் ஆசிரியர் பாண்டி அழகப்பா கல்வியியல் கல்லூரி மாணவி சங்கீதா கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





■ காட்டுமன்னார்கோயில் கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் காவல் நிலையத்தில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் மதுரையில் விசிக சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது சிறுத்தை கனி என்பவர் பாரதிய ஜனதா கட்சியினர் தேர்தலின் போது வாக்கு சேகரிக்க கிராமத்துக்குள் வந்தால் விரட்டியடிப்போம் என பேசியது தொடர்பாக பாரதிய ஜனதா கட்சியின் காட்டுமன்னார்கோயில் ஒன்றிய தலைவர் எம் ஆர் செந்தில் குமார் தலைமையில் பத்துக்கு மேற்பட்டோர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர் இந்த நிகழ்வின் போது மாவட்ட செயலாளர் ஓ பி சி .கோதண்டராமன் மாவட்டத் தலைவர். ஐடி பிரிவு சரண்ராஜ். மாவட்டத் துணைத் தலைவர் இளைஞர் அணி விஷ்வாநாத் . ஒன்றிய துணைத் தலைவர் தர்மராஜ். பொருளாளர் இரும்பு கடை பிள்ளை. மருத்துவர். சௌந்தர்ராஜன். கலை மன்னன். சக்தி முருகன். ஜீனுவ ராஜன். பாலு மற்றும் பலர் கலந்து கொண்டு மனுக்களை அளித்தனர்.



■ இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், பேய்க்கரும்பில் முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் 94வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது நினைவிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்.இ.ஆ.ப., அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.செ.ஹபிபூர் ரஹ்மான் அவர்கள் உள்ளார்.

# வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்தில் மாபெரும் பனை விதைகள் நடும் திட்ட துவக்க விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி பனை விதைகள் நடும் பணியினை துவக்கி வைத்தார்





சிவகங்கை, அக்.16-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், மேலையூர் ஊராட்சிக்குட்பட்ட வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு, இந்திய செஞ்சிலுவை சங்கம் ஆகியவைகள் இணைந்து நடத்திய மாபெரும் பனை விதைகள் நடும் திட்ட துவக்க விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் பனை விதைகள் நடும் பணியினை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர் மேலாண்மையை பாதுகாக்கும் வகையில் பல்வேறுத் திட்டங்களை வழங்கி வருவதுடன், விவசாயிகளின் தேவையை உணர்ந்து நிறைவேற்றும் வகையில் தனி நிதி நிலை அறிக்கையுடன் கூடிய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இன்றையக்க ாலக்கட்டத்தில் 70 சதவிகிதம் விவசாயமே பிரதானமாக இருந்து வரும் இந்நிலையில் இவற்றை எந்த அளவிற்கு உயர்த்த வேண்டுமோ அந்த அளவிற்கு பல்வேறு திட்டங்களை வழங்கி விவசாயிகளின் முன்னேற்றத்தினை இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அதன்மூலம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு, தமிழக அரசின் திட்டங்கள் அடிப்படையாக விளங்கி வருகிறது.

மேலும், பசுமையான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழகம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், மீண்டும் பனைமரங்கள் அதிக அளவு வளர்த்து நீர்நிலை ஆதாரங்களை பாதுகாத்திடும் வகையிலும், பழமைவாய்ந்த சிறப்புக்களின் ஒன்றான பனைமரங்கள் வருங்காலத்தில் இளைஞர் சமுதாயத்தால் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இதன் நோக்கம், பாரம்பரியம் வாய்ந்த பனைமரம் வளர்ப்பது மட்டுமன்றி, இதன்மூலம் நீர்நிலை ஆதாரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பாக கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் போன்றப் பகுதிகளின் கரையோரங்களிலும் மற்றும் சாலை ஓரப்பகுதிகளிலும் பனைவிதைகள் நடவு செய்து பனைமரங்கள் வளர்க்கும் பொழுது, விவசாயிகளின் நண்பனாக இருந்து நீர்நிலை ஆதாரங்கள் பாதுகாக்கும் வகையில் கரைகள் பலப்பட்டுவது மட்டுமன்றி, இதன்மூலம் பல்வேறு வகையான மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பதற்கும் அடிப்படையாக திகழ்கிறது. இதன் பராமரிப்பு என்பது மிகக்குறைவு. பனைவிதைகள் நடவு செய்து ஓராண்டுகள் பராமரித்தாலே தொடர்ந்து தானாக வளர்ந்து பலனைத்தரக்கூடிய அளவிற்கு சிறப்புவாய்ந்த மரமாகத் திகழ்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு எல்லாக் கிராமப்பகுதிகளிலும் அதிக அளவு இருந்த பனைமரம் தற்பொழுது குறைந்துள்ளது. அதை மீண்டும் அதிக அளவு வளர்த்து வரும் இளைஞர் சமுதாயம் பாதுகாத்திடும் வகையில் இத்தகையத் திட்டத்தை அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுத்திட அரசால் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க , தமிழகம் முழுவதும் 6 கோடி பனை விதைகள் நடும் திட்டமானது, தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் 10 இலட்சம் பனை விதைகள் நடும் பணியானது, மாவட்டத்திலுள்ள 12 வட்டாரங்களுக்குட்பட்ட 445 கிராம ஊராட்சிகளிலும் இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, வேட்டங்குடி பறவைகள் சரணாலய பகுதிகளில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு, இந்திய செஞ்சிலுவை சங்கம் ஆகியவைகள் இணைந்து நடத்தும் மாபெரும் பனை விதைகள் நடும் திட்ட துவக்க விழாவானது சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் உமையாள் இராமநாதன் மகளிர் கலைக்கல்லூரி மற்றும் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கலைக்கல்லூரி, அழகப்பா பள்ளி குழுமம், அழகப்பா நர்சிங் கல்லூரி, பூலாங்குறிச்சி விஎஸ்எஸ் அரசு கலைக்கல்லூரி ஆகியவைகளைச் சார்ந்த மாணவ மாணவியர்கள், இளம் செஞ்சிலுவை சங்கம் மற்றும் நாட்டு நலப்பணிகள் திட்ட மாணவ மாணவியர்கள் மற்றும் மேற்கண்ட துறை சார்ந்த அலுவலர்கள், தன்னார்வலர்கள் என 200க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

நாட்டின் எதிர்கால சந்ததியினர்களான மாணாக்கர்களாகிய நீங்கள் தான் இயற்கை வளத்தினை பாதுகாத்திடல் வேண்டும். அதுவே, உங்களது தலையாய கடமையாகும். எனவே, இயற்கை வளங்களை பேணி பாதுகாத்து பராமரித்திட வேண்டும் என்ற அடிப்படையில் தங்களிடையே ஆர்வத்தினை ஏற்படுத்திடும் பொருட்டு, பனைவிதைகள் நடும் பணியில் தங்களின் ஆர்வத்தின் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நமது மாவட்டத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இன்றையதினம் நடப்பட்டு வரும் பனை விதைகள் நடும் பணியானது, இன்று மற்றும் நாளை என இரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது. அந்தந்த பகுதிகளில் நடப்பட்டு வரும் பனை மர நாற்றுகளை அந்தந்த பகுதிகளுக்குட்பட்ட பொதுமக்கள் முறையாக பேணிக்காத்து சிவகங்கை மாவட்டத்தினை பசுமையான மாவட்ட மாகவும் இயற்கை வளத்தினை மேம்படுத்துவதற்கும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், மாவட்ட வன அலுவலர் (பொ) திரு.ரேவதி ராமன்,இ.வ.ப.,, அவர்கள், உதவி வன பாதுகாவலர் திரு.மலர் கண்ணன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை, பசுமை தோழர் திரு.ஆனந்த் நாகராஜ், இந்திய செஞ்சிலுவை சங்கதலைவர் திரு.சுந்தர்ராஜன், உமையாள் இராமநாதன் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.முனிராஜ், வட்டாட்சியர் திரு.நாகநாதன் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அம்மாபட்டி ஊராட்சியில், இன்றையதினம் (15.10.2025) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மூலம்

# தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து பார்வையிட்டார்

இராமநாதபுரம், அக்.16-

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மூலம் தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் இராமேஸ்வரத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் தரம் உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி இன்று தரம் உயர்த்தப்பட்ட இராமேஸ்வரம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதுடன், புதிய தீயணைப்பு நிலையத்தில் வரப்பெற்றுள்ள பேரிடர் கால மீட்பு உபகரணங்கள் மற்றும் கூடுதல் தீயணைப்பு வாகனம் உள்ளிட்டவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தீயணைப்பு துறை அலுவலர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நிலை அலுவலர் திரு.அருள்ராஜன் அவர்கள், இராமேஸ்வரம் நகர் மன்ற துணைத்தலைவர் திரு.தெட்சனாமூர்த்தி அவர்கள், இராமேஸ்வரம் வட்டாட்சியர் திரு.அப்துல் ஜபார் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம், திக்கணங்கோடு பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

# பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் சிவகங்கை மாவட்ட வருவாய் அளவிலான குடியரசுதின தடகள போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி கொடியசைத்து துவக்கி வைத்தார்



சிவகங்கை, அக்.16-

சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், சிவகங்கை மாவட்ட வருவாய் அளவிலான குடியரசுதின தடகள போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, மாணாக்கர்கள் பயன்பெற்று வருகின்றனர். மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமன்றி விளையாட்டிலும் சிறந்து விளங்கிட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, அவர்களின் ஆர்வத்திற்கேற்ற விளையாட்டினை தேர்ந்தெடுத்து, அதில் சாதித்து காட்டும் வகையில் சிறப்பான நடவடிக்கைகள் துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், வருவாய் மாவட்ட அளவிலான குடியரசுதின தடகள போட்டிகள் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், 20252026 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை வருவாய் மாவட்ட அளவிலான குடியரசுதின தடகள போட்டிகள் இன்றையதினம் சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில், 86 வகையான தடகள போட்டிகளில் 14, 17 மற்றும் 19 வயது என மேற்கண்ட பிரிவுகளில் சுமார் 1,000 மாணவ மாணவியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் முதல் இரண்டு இடங்களை பெறும் மாணவ, மாணவியர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தேர்வாவர்கள். இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான போட்டிகளில் 100 மீ, 200மீ, 400 மீ, 600மீ, 800மீ, 1,500மீ, 3,000மீ, நீளம் தாண்டுதல், மும்முறை தத்தித்தாவுதல், உயரம் தாண்டுதல், வட்டு எறிதல், குண்டு எறிதல், கனை உன்றி தாவுதல், 4 ஜ் 100 தொடர் ஓட்டம் , 4 ஜ் 400 தொடர் ஓட்டம், 80 மீ தடை தாண்டி ஓட்டம், 100 மீ தடை தாண்டி ஓட்டம், 110 மீ தடை தாண்டி ஓட்டம் என பல்வேறு பிரிவுகளில் போட்டிகளானது மாணவ, மாணவியர்கள் இருவருக்கும் நடைபெறவுள்ளது.

மேலும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி, தோல்விகள் என்பதை கருத்தில் கொள்ளாமல், முதலில் நாம் அதில் பங்கு கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் பல்வேறு போட்டிகளில் பங்கு கொள்வதன் அடிப்படையில், தங்களது திறன்களை வெளிக்கொணருவதற்கு அவை வாய்ப்பாக அமையும். இதனை மாணாக்கர்கள் கருத்தில் கொண்டு தங்களுக்கு விருப்பமான விளையாட்டுப் போட்டிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதில் வெற்றி பெற்று, அதன்மூலம் தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.மாரிமுத்து, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) திரு.இராஜேந்திரன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் திரு.கார்த்திக்கேயன் மற்றும் மாணவ மாணவி யர்கள், ஆசிரியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## உலகளவில் புகழ்பெற்ற வேலூர் விஐடி குழும, போபால் விஐடியில் சுகாதார மையம் திறப்பு விழா

வேலூர், அக்.16-

மத்திய பிரதேசம், போபால், உலகளவில் புகழ்பெற்ற வேலூர் விஜடி குழும, போபால் விஜடியில் சுகாதார மையம் திறப்பு விழா, போபால் வி.ஐ.டி.யில் விடுதி அலுவலகத்தில், சுகாதார மையத்தை விஜடி பல்கலைக்கழக வேந்தர் டாக்டர். ஜி.விஸ்வநாதன் தலைமையில் ரிப்பன் வெட்டி, திறந்து வைத்து, குத்து விளக்கேற்றி சிறப்பித்தனர். இதில் துணைத் தலைவர் சங்கர் விஸ்வநாதன், தமிழ்நாடு, வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், மாணவர்கள் வி.ஐ.டி. நிர்வாக அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## நாட்டு நலப் பணித்திட்ட துவக்க விழா

சிவகங்கை, அக்.16-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி சுமார் எண்பது ஆண்டுகளாக கிராமப்புற மாணவர்களுக்கும், ஏழை மாணவர்களுக்கும் கல்விச் சேவை ஆற்றி வருகிறது. அப்பள்ளியில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு பள்ளிக்கல்வித்துறை அனுமதியுடன் மீண்டும் நாட்டு நலப் பணி திட்டம் தற்போது துவங்கப்பட்டுள்ளது. அதன் ஒருங்கிணைப்பாளராக முதுகலை ஆசிரியர் சேவியர் எழில் அரசனும், இணை ஒருங்கிணைப்பாளராக பட்டதாரி ஆசிரியர் பிரபுவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கான துவக்க விழாவில் பேசிய பள்ளி தலைமை ஆசிரியர் அழகப்பன் நாட்டு நலப் பணித்திட்டத்தின் முக்கியத்துவத்தை மாணவர்கள் மத்தியில் எடுத்துரைத்தார். ஆசிரியர்கள் மாரிமுத்து சுப்பிரமணியன் கண்ணதாசன் வாழ்த்துரை வழங்கினர். பதினோராம் வகுப்பில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் ஒரு குழுவாகவும், மாணவிகள் ஒரு குழுவாகவும் இருந்து இத்திட்டத்தில் செயல்பட உள்ளனர். அவர்களுக்கான வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி விரைவில் அளிக்கப்பட உள்ளது. இத்திட்டம் மூலம் வரும் டிசம்பர் அரையாண்டுத் தேர்வு விடுமுறையில் ஒரு வார முகாமும் நடைபெற உள்ளது. அதற்கானப் பணிகளை ஒருங்கிணைப்பாளர்கள் தற்போதே திட்டமிட துவங்கியுள்ளனர்.





## காளையார்கோவில் வட்டார கலைத் திருவிழா கோலகால கொண்டாட்டம்

காளையார் கோவில் அக்16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டார அளவிலான 1 முதல் 5 ஆம் வகுப்புகள் மற்றும் 6 முதல் 8 ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கான கலைத் திருவிழாப் போட்டிகளானது அரசு பள்ளிகளுக்கு தனியாகவும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு தனியாகவும் காளையார்கோவில் வட்டார வளமையம் அரசு மேல்நிலைப்பள்ளி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் கூட்டரங்குகளில் நடைபெற்றது. ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறை மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ தலைமை வகித்து போட்டிகளை தொடங்கி வைத்தார். கலைத்திருவிழா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ வட்டாரக் கல்வி அலுவலர் லதாதேவி வட்டார வள மைய பொறுப்பு மேற்பார்வையாளர் கஸ்தூரிபாய் முன்னிலை வகித்தனர். பசுமையும் பாரம்பரியமும் என்பதன் மையக்கருத்தில் நாட்டுப்புற நடனம் பரத நாட்டியம் பிறவகை நடனம் நாட்டுப்புற பாடல் (தனி) செவ்வியல் இசை (தனி) வில்லுப்பாட்டு தனி நடிப்பு பாவனை நடிப்பு வீதி நாடகம் இலக்கிய நாடகம் ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் களிமண் சிற்பம் பானை ஓவியம் ரங்கோலி மணல் சிற்பம் காகித கூழ் செதுக்கு சிற்பம் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிக்கான ஏற்பாட்டினை ஆசிரியர் பயிற்றுநர்கள் ஜோதிமணி சத்தியமூர்த்தி சித்திக்பாத்திமா ஆறுமுகம் மார்க்ரெட் கார்த்தி பள்ளி மேலாண்மைக்குழு கணக்காளர் திருச்செல்வம் சிறப்பு ஆசிரியர்கள் கணினி பயிற்றுநர்கள் சிறப்பாக செய்திருந்தனர். ஒருங்கிணைப்பாளர்களாக தலைமை ஆசிரியர்கள் லதா பத்மினி செல்விசாரதா பட்டதாரி ஆசிரியர்கள் ஆரோக்கியசாமி பாண்டி அல்போன்சா சிறப்பாக செயல்பட்டனர். மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் ஒவ்வொரு போட்டிகளிலும் கலந்து கொண்டு பங்களிப்பு செய்தனர். வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் சிவகங்கையில் நடைபெறும் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டது.

உலக அளவில் புகழ்பெற்ற வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில்

## உலகளவில் போட்டியிட்டு சாதித்து எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்பது தான் வி.ஐ.டியின் நோக்கம்

### வேந்தர் ஜி.விசுவநாதன் செய்தியாளர்களுக்கு பேட்டி



காட்பாடி, அக்.16-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஜடி பல்கலைக்கழகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு விஜடி பல்கலைக்கழக தலைவரும் வேந்தருமான கோ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.

செய்தியாளர்கள் சந்திப்பில் செய்தியாளர்களை சந்தித்து பணிவுடன் உரையாடி தீபாவளி வாழ்த்து தெரிவித்து விஜடி தலைவர் கோ விஸ்வநாதன் பேசியதாவது: உலகளவில் போட்டியிட்டு சாதித்து எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்பது தான் வி.ஐ.டியின் நோக்கம் என கூறினார்.

கல்வி மூலம் தான் ஒரு நாடு வளர முடியும். இந்தியா வளர வேண்டும், தமிழகம் வளர வேண்டும். அந்தவகையில் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள 4 மாவட்டங்களை முன்மாதிரியாக மாற்ற

வேண்டும் என்ற வகையில் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்க ஸ்டார்ஸ் திட்டம் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் 100க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்பட்டுள்ளது. பட்ட படிப்பு முடித்த மாணவர்கள் தங்களின் பெற்றோர் வாங்கும் சம்பளத்தை விட 10 முதல், 20 மடங்கு வரை சம்பாதிக்கின்றனர்.

இந்தியாவில் உயர்க் கல்வி பெறும் மாணவர்கள் விகிதம் 28 சதவீதமாக உள்ளது. இதில் தமிழகம் 47 சதவீதமாக உள்ளது.

வட மாவட்டங்களில் உயர்கல்வி பெறும் மாணவர்கள் விகிதம் குறைவாக உள்ளது.

நாம் பொருளாதாரம், கல்வியில் தங்கி இருக்கிறோம். இந்த நிலையை கல்வியை வைத்து தான் மாற்ற வேண்டும். அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை தொடங்கி இதுவரை 10 ஆயிரம் பேருக்கு ரூ.12 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி கல்வியில் கேரளா முதலிடம், தமிழகம் 2ம் இடத்தில் உள்ளது. உயர்கல்வியில் தமிழகம் முதலிடமும், கேரளா 2ம் இடத்திலும் உள்ளது. இந்தியாவில் மொத்த 1200 பல்கலைக் கழங்கள் உள்ளன. உலகம் முழுவதும் 25,000 பல்கலைக்கழகங்கள் உள்ளன.

உலகளவில் போட்டியிட்டு சாதித்து எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்பது தான் வி.ஐ.டியின் நோக்கம். விஜடி பல்கலைக் கழகத்தில் 4,000 பேர் பி.ஹெச்.டி ஆய்வு படிப்பை மேற்கொண்டு வருகின்றனர் என இவ்வாறு அவர் கூறினார். துணைத் தலைவர் சேகர் விசுவநாதன் கூறுகையில், வி.ஐ.டி ஆராய்ச்சி துறையில் தனித்து விளங்குகிறது. 2024 ஷாங்காய் ஏஆர்டபிள்யூயு தரவரிசை பட்டியலில் இந்தியாவில் முதல் 2 இடங்களில் வி.ஐ.டி இடம் பிடித்துள்ளது. வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் தான் பி.ஹெச்.டி படிப்பை இந்தியாவிலேயே அதிகமான மாணவர்கள் படித்து வருகின்றனர். அவர்களுக்கு மாதம் தோறும் ரூ.35 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை ஊக்கத்தொகை அளித்து வருகிறோம்.

அமெரிக்காவில் ஸ்டான் போர்டு பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பட்டியலில் இந்திய அளவில் வி.ஐ.டி முதல் 5 இடத்தில் உள்ளது. வேலூர், சென்னை வளாகத்தில் பணிபுரியும் 90 பேராசிரியர்கள் உலகின் முதல் 2 சதவீத விஞ் ஞானிகளாக உள்ளனர்.

உலகளவில் முதல் 2 சதவீத விஞ்ஞானிகளாக வி.ஐ.டி பல்கலைக் கழகத்தில் சுமார் 101 பேராசியர்கள் பணிபுரிவது பெருமையாக உள்ளது. வி.ஐ.டி பல்கலைக் கழகம் ஆராய்ச்சியில் தனி கவனம் செலுத்தி வருகிறோம்.

க்யூ.எஸ். உலக பல்கலைக்கழக தரவரிசையில் பொறியியல் தொழில்நுட்பத் துறையில் வி.ஐ.டி 142வது இடத்தில் உள்ளது. இந்திய அளவில் 9ம் இடம் பிடித்துள்ளது.

மேலும், கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் இன்பர்மேஷன் சிஸ்டம்ஸ் பாட பிரிவில் 110வது இடத்திலும், டேட்டா சயின்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு பாட பிரிவில் முதல் 100 இடங்களில் வந்துள்ளது.

தேசிய கல்வி நிறுவன தரவரிசை பட்டியலில் 2016 முதல் தொடர்ந்து வி.ஐ.டி நாட்டின் முதல் 20 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தர வரிசைப்படுத்தி உள்ளது. வி.ஐ.டியில் 1 லட்சம் மாணவர்கள் படித்து வருகின்றனர்.

செயற்கை நுண்ணறிவு வருகையால் வேலை வாய்ப்பில் பாதிப்பு ஏற்பட்டாலும் கூட, மாணவர்கள் புதிய தொழில்நுட்பத்தை கற்றுக் கொண்டால் புதிய வேலை வாய்ப்புகளை பெறலாம். வேதியியல் பாட பிரிவில் நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய பேராசிரியர் சூசுமு கிடகவா என்பவருடன் விஜடி பல்கலைக்கழக பேராசிரியர் தாமஸ்குமார் பான்டா ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார் என்றார். பேட்டியின்போது துணைவேந்தர் காஞ்சனா பாஸ்கரன், ரமணி பாலசுந்தரம், செயல் இயக்குநர் சந்தியா பென்டரெட்டி, இணை துணைவேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

## என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரியின் 25வது பட்டமளிப்பு விழா

கோவை, அக்.16-

கோவை காளப்பட்டி பகுதியில் இயங்கி வரும் டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரியின் 25வது பட்டமளிப்பு விழா கோவை மருத்துவ மையம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்லா பழனிசாமி தலைமையில் கல்லூரியின் செயலர் மருத்துவர் தவமணி தேவி பழனிச்சாமி, கோவை மருத்துவமனை ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் மருத்துவர் அருண் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் என்.ஜி.பி. கலையரங்கில் நடைபெற்றது. இதில் கல்லூரியின் முதல்வர் முனைவர் சூ சரவணன் பட்டமளிப்பு உறுதிமொழியை வழங்கினார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இந்திய வருமான வரித்துறை ஆணையர் நந்தகுமார் ஐ.ஆர் எஸ் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி, கல்வியின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

மொத்தம் 1,992 மாணவர்கள் (இளங்கலை 1,479, (முதுகலை 431) பட்டம் பெற்றனர். இதில் பல்கலைக்கழக தரவரிசையில் முதலிடம் பெற்ற 82 மாணவர்களும் பட்டம் பெற்றனர்.மேலும் இந்நிகழ்வில், டாக்டர் என்.ஜி.பி ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் முதன்மைச் செயல் அதிகாரி முனைவர் ஓ.டி.புவனேஷ்வரன், முதன்மைச் செயல் இயக்குநர் மா. நடேசன், என்.ஜி.பி. கல்விக் குழுமங்களின் கல்விசார் இயக்குனர் முனைவர் பெ.இரா.முத்துசாமி, புல முதன்மையர்கள் மற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினைச் சிறப்பித்தனர்.




## சிவகங்கை:அதிமுக பிரமுகரால் ஒட்டப்பட்ட போஸ்டரால் பரபரப்பு : வியப்படைந்த பாஜகவினர்

சிவகங்கை, அக்.16-

தமிழகம் தலை நிமிர தமிழனின் சுற்றுப்பயனம் என்கிற பெயரில் நேற்று முன் தினம் மதுரையிலிருந்து தனது பிரச்சார சுற்று பயனத்தை பா.ஜ.க தலைவர் நயினார் நாகேந்திரன் துவங்கியுள்ளார். இதனை அடுத்து முதலாவதாக சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு வருகை தந்து பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார். ஏற்கனவே அதிமுக, பா.ஜ.க கூட்டனியை உறுதி செய்துள்ள நிலையில் திருப்புவணம் பகுதியை சேர்ந்த அதிமுகவின் மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரனி துனைச்செயலாளர் மணிமாறன் என்பவர் திருப்புவணம் நகர் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் "மக்கள் விரும்பும் மகத்தான் தலைவர் புரட்சி தமிழர் எடப்பாடியாரின் ஆட்சியை அமைக்க சபதம் ஏற்ற எங்கள் தொப்புள் கொடி உறவான பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்களுக்கு அதிமுக தொண்டர்கள் சார்பாக நன்றிகள்" என்கிற வாசகங்கள் அடங்கிய போஸ்டரை ஒட்டியுள்ளார். இது அதிமுக மற்றும் பா.ஜ.க தொண்டர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதுடன் பொது மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தொப்புள் கொடி உறவு என குறிப்பிட்டு இருந்த வார்த்தையால் பாஜகவினர் வியப்படைந்துள்ளனர்.



## ஏரோ சிலம்பாட்ட அகாடமி சார்பில் மாபெரும் சிலம்பாட்ட போட்டி

கோவை, அக்.16-

கோவை புலியகுளத்தில், ஏரோ சிலம்பாட்ட அகாடமி சார்பில், திமுக கோவை மாநகர் மாவட்ட தொண்டரணி அமைப்பாளரும், சிலம்பாட்ட ஆசானுமான அர்ஜுனன் தலைமையில் மாபெரும் சிலம்பாட்ட போட்டி நடைபெற்றது. இந்த போட்டியை கோவை மாநகர் மாவட்ட திமுக பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் துவக்கி வைத்தார். இந்த சிலம்பாட்ட போட்டியில், கோவை, ஈரோடு, சிவகங்கை, திருப்பூர், தாராபுரம் பகுதிகளில் இருந்து 300 க்கும் மேற்பட்ட சிலம்பாட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கோப்பைகளும், சான்றிதழ்களும் பரிசுகளாக வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, சிலம்பாட்ட மூத்த ஆசான்கள் குணசேகரன், பழனிச்சாமி மற்றும் நமசிவாயம் ஆகியோர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், திமுக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, தகவல் தொழில்நுட்ப அணி துணைச்செயலாளர் டாக்டர்.மகேந்திரன், கோவை மாநகர் மாவட்ட துணைச்செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா, முன்னாள் எம்பி நாகராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வெநா. உதயக்குமார், முமச. முருகன், பகுதிக்கழக செயலாளர்கள் பசுபதி, கோவை லோகு, மார்க்கெட் மனோகரன், டெம்போ சிவா, மாமன்ற உறுப்பினர்கள் சந்தோஷ், லாரா பிரேம்தேவ், குணசேகரன், மற்றும் மணிகண்டன், சுரேஷ், பாபு, வழக்கறிஞர் கொங்கு அசரப், கோவை இஸ்லாம், ஆர்எஸ்.புரம் பூபாலன், பிரின்ஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 14 வது மண்டலம் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம்





புழுதிவாக்கம், அக் .16-

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சென்னை மாநகராட்சி 14 வது மண்டல அலுவலகத்தில் (அக்டோபர் : 15) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திமுக மேற்கு பகுதி கழகச் செயலாளர் ,.14 வது மண்டல குழு தலைவருமான,. பெருங்குடி ,எஸ்.வி.ரவிச்சந்திரன் மற்றும் கல்விக் குழு தலைவர், 181 வது மாமன்ற உறுப்பினருமான., பாலவாக்கம், விஸ்வநாதன் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் வார்டுகளில் நடைபெற வேண்டிய பணிகளின் கோரிக்கைகளை வைத்தனர். தொடர்ந்து 186 வது மாமன்ற உறுப்பினர், ஜே. கே. மணிகண்டன் வடகிழக்கு பருவமழை தொடர்பாக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் புழுதிவாக்கத்தில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து தருமாறு ஆலோசனைக் கூட்டத்தில் கோரிக்கையாக முன் வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161